ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2454/39 - 2025 සැප්තැම්බර් මස 17 වැනි බදාදා - 2025.09.17

2454/39 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 66705 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இல. 249/ 1, மாலபே வீதி, கொஸ்வத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ளதுமான KIU கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2015, சனவரி 07 ஆந் தேதிய 1896/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான I ஆம் அட்டவணையை, I ஆம் அட்டவணையில் பின்வரும் நிபந்தனை (vi) இனை சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-

"(vi) KIU கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் அக்குபஞ்சர் மருத்துவ விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமானி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தரத்தில்) உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் அல்லது விவசாய விஞ்ஞானத்தில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகளை குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளாக அமைந்தொழுகுதல் வேண்டும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) எது எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நுழைவுத் தகைமைகளுக்கு மேலதிகமாக மாணவரொருவர் அக்குபஞ்சர் மருத்துவ விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு அத்தகைய மாணவர் பின்வருவனவற்றை வெற்றிகரமாக நிறைவு செய்திருப்பின், அனுமதிக்கப்படலாம் -

(I) சூக்கோ சங் மருத்துவக் கல்லூரி சீனாவில் வழங்கப்படும் அக்குபஞ்சர் அல்லது துய்னா மசாஜில் ஒருங்கிணைந்த பட்டம்.

அத்துடன்,

(II) பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட தரச்சராசரி புள்ளியினைப் பெறுவதற்கான ஏதேனும் இடைவெளியினை பூர்த்தி செய்வதற்கு தேவையானவற்றை எல்லா அலகுகளும் பின்வருமாறாக ;

| இடைவெளியை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட வேண்டிய அலகுகள் | | |
|---|---|---|
| அலகு தலைப்பு | தரச்சராசரி புள்ளிகள் | கல்வியாண்டு |
| ACU 1401<br>மனித உடற்கூற்றியல் | 4 | 1 ஆம் ஆண்டு |
| ACU 1602<br>மனித உடலியங்கியல் | 6 | |
| ACU 1403<br>உயிர்வேதியல் | 4 | |
| ACU1308<br>தொற்றுநோயியல் | 3 | |
| ACU 1309<br>ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை | 3 | |
| ACU 2401<br>நுண்ணுயிரியல் மற்றும் ஒட்டுண்ணியல் | 4 | 2 ஆம் ஆண்டு |
| ACU2503<br>பொதுச் சுகாதாரம் | 5 | |
| ACU2405<br>உயிரியல் புள்ளிவிபரவியல் | 4 | |
| ACU2306<br>அடிப்படை மருத்துவம், மனநலம் மற்றும் குழந்தை நலன் தொடர்பான நிலைமைகள் | 3 | |
| ACU2108<br>அடிப்படை அறுவை சிகிச்சை, கண் மற்றும் காது நிலைமைகள் | 1 | |
| ACU4804<br>ஆய்வுக்கட்டுரை | 8 | 4 ஆம் ஆண்டு |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, செத்தெம்பர் 08.

EOG 09 - 0175

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது